பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 வைகாசி 30 ரம்ழான் 22 இதழ் 122
யாழ்ப்பாணம் புதன்கிழமை 12-6-1985

### இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி

## ஐ. நா. பொதுசெயலருக்கு இந்திய அமைச்சர் விளக்கம்

(வாஷிங்டன்)

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் திரு. குர்ஷீத் ஆலம் கான் ஐ. நா. பொதுச்செயலாளருடன் உலக விவகாரங்கள் பற்றி கலந்துரையாடிய போது இலங்கை இனப்பிரச்னை குறித்தும் விளக்கினர்.

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியின் அமெரிக்க விஜயத்தையொட்டி வாஷிங்டன் வந்துள்ள திரு. ஆலம் கான் ஐ. நா. சபையில் நமீபியா சம்பந்தமாக உரை

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திய உதவியுடன் விரைவில் தீர்வு!

சுவீடனில் ரொனி டி மெல்

(லண்டன்)

இலங்கையின் இனப் பிரச்னைக்கு இந்தியாவின் ஒத்துழைப்புடனும் உதவியுடனும் விரைவில் தீர்வுகாணப்பட்டு நாட்டில் அமைதியும், அரசியல் உறுதிப்பாடும் நிலவும் என்று நிதிஅமைச்சர் ரொனி டி மெல் சுவீடனின் ஸ்ரொக்

(8-ம் பக்கம் பார்க்க)

### அவசியமற்ற

# கடத்தல், கொள்ளைகளுக்கு விடுதலைப்புலிகள் எதிர்ப்பு

## மக்கள் விரோதச் செயலென கண்டனம்

### எடுத்துச்சென்ற அரிசி மூடைகளை திருப்பிக் கொடுக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய சேவைகள் புரியும் ஸ்தாபனங்களில் நடக்கும் கொள்ளைகள், அவ்வாறான சேவைகளில் ஈடுபடும் வாகனங்களைக் கடத்தல் போன்றவற்றை தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் கண்டித்துள்ளது.

இம்மாதிரிச் சம்பவங்கள் மக்கள் விரோதச் செயல்கள் என்று கூறியுள்ள அவ்வியக்கம் மக்களைப் புறக்கணித்து விட்டுவிடுநிலைகாண முடியாது என்றும்தெரிவித்துள்ளது.

குருநகர் களஞ்சியத்தில் இடம்பெற்ற அரிசி கடத்தலை கண்டித்துள்ள விடுதலைப் புலிகள் அவைகளைத் திருப்பிக் கையளிக்கும்படி அன்புடன் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் இச்செயலால் மக்கள் பட்டினியால வாடும் நிலை ஏற்படும் என்று எச்சரித்துள்ளது.

நேற்று மாலை தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம் தனது பரீட்சார்த்த வானொலிச்செய்தியில் இது தொடர்பான அறிக்கையொன்றை விடுத்தது.

அத்தியாவசிய சேவைகளைப் புரியும் ஆஸ்பத்திரிகள், அஞ்சல்-தொலைத் தொடர்பு நிலையங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகள், உணவுப் பொருட்கள் விநியோகிக்கும் களஞ்சியங்கள் ஆகியவற்றில் இடம்பெறும் கொள்ளை, வாகனங்களைக் கடத்துதல் போன்ற சம்பவங்களில் ஈடுபட வேண்

(8-ம் பக்கம் பார்க்க)

## "பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயம்"

அரச அதிபர் அச்சம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் உணவுக்களஞ்சியத்தில் 9ம் திகதி இரவு எடுத்துச் செல்லப்பட்ட அரிசி மூடைகளை மீள ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்த வேளையில் மீண்டும் அக்களஞ்சியத்தில் இருந்து அரிசி, சீனி எடுத்துச் செல்லப்பட்டமை யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய உணவுப் பஞ்சமொன்றை உருவாகலாம் என்று அஞ்சுகிறேன்".

இவ்வாறு யாழ் அரசாங்க அதிபர்எம் பஞ்சலிங்கம்நேற்று

[8ம் பக்கம் பார்க்க]

### திருகோணமலைச் சம்பவங்கள்:

## அல்ஜீரியாவிலிருந்து ரஜீவ் விசாரித்தார்

(கொழும்பு)

திருகோணமலையில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தி நேற்று அல்ஜீரிய தலைநகரிலிருந்து டெலிபோனில்

[8-பக்கம் பார்க்க]

## திருமலையில் 50தீவிரவாதிகள் கைது

(கொழும்பு)

திருகோணமலையிலுள்ள நிறுவனம் ஒன்றில் கடந்த திங்கள் இரவு கொள்ளை நடத்த முயன்ற தீவிரவாதிகள்

(8ம் பக்கம் பார்க்க)

## ஹோட்டல் தகர்ப்பு

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள பிரபல உல்லாச ஹோட்டல் ஒன்று குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. சம்பவம் நடந்தபோது அங்கு எவரும் இருக்கவில்லையாம்.

இதேசமயம் நிலாவெளி, பாலையூற்று, குச்சவெளி ஆகிய பகுதிகளில் ஆயுதப்படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

## வவனியாவில் நடந்த நெல் கொள்ளை

(வவனியா)

வவனியா வேப்பங்குளம் நெற்சந்தைப்படுத்தும் களஞ்சியத்திலிருந்து கொள்ளையடிக்

(8ம் பக்கம் பார்க்க)

## குருநகர் களஞ்சியத்தில் நேற்று மீண்டும் கொள்ளை

### சில மூடைகள் மீட்பு

[யாழ்ப்பாணம்]

குருநகரிலுள்ள யாழ் உணவுக் களஞ்சியத்தில் நேற்று இரண்டாவது தடவையாக அரிசி மூடைகள் கொள்ளையடிக்கப்பட்டது.

இந்த உணவுக்களஞ்சியத்தில் சுமார் 8000 அரிசி மூடைகளும், 140 சீனி மூடைகளும், 15 மா மூடைகளும் இருந்ததாக உணவுக் கட்டுப்பாட்டு இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை களஞ்சியத்திற்குள் சென்றவர்கள் உண

(8-ம் பக்கம் பார்க்க)

### குச்சவெளி பொலிஸ்நிலைய தாக்குதல்

## 78 பேர் சந்தேகத்தில் கைது

(கொழும்பு)

குச்சவெளி பொலிஸ் நிலைய தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் 78 பேரை ஆயுதப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் இப்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். குச்சவெளி தாக்குதல் சம்பந்தமாக மட்டுமின்றி கடந்த கால சம்பவங்கள் பலவற்றைப்பற்றியும் எதிர்கால தாக்குதல்கள் பற்றியும் இவர்களிடமிருந்து தகவல்கள் கிடைக்கும் என அதிகாரிகள் எதிர்பார்க்கின்றார்களாம்.

### டிரக்கும் ஜீப்பும்

மட்டக்களப்பு பகுதியில்

[8ம் பக்கம் பார்க்க]

### தலவாக்கலை பிரச்னை:

## தொண்டா ஜனதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

தலவாக்கலை பகுதியிலுள்ள

[8ம் பக்கம் பார்க்க]

## ரஜீவ் நாடு திரும்பியதும்

### விசேஷ தூதுவர் இங்கு வருவார்

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி தமது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் இலங்கை இனப்பிரச்னை பற்றி மீளாய்வு செய்யப்பட விருப்பதாகத் தெரிகின்றது.

அண்மையில் இடம்பெற்ற புதுடில்லி மகாநாட்டில் இருதரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வினை உறுதிப்படுத்தும் விதத்தில் சிரேஷ்ட இந்தியத் தூதுவர் ஒருவர் இலங்கைக்கு அனுப்பட விருப்பதாகவும் கூறப்படுகின்றது

இலங்கைத் தலைவர்களையும் அதிகாரிகளையும் அவர் சந்திப்பார் இலங்கைத் தமிழர் பிரச்னை தீர்க்கப்படுவதில் வீண் தாமதங்களை இந்தியத் தலைவர் ஏற்படுத்த விரும்பவில்லையென்றும் கூறப்படுகின்றது.

### விஞ்ஞான, விளையாட்டு ஆசிரியர்களுக்கு

## அடுத்த வாரம் நேர்முகப்பரீட்சை

(கொழும்பு)

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் பதவிக்கும் விளையாட்டுத் துறை ஆசிரியர் பதவிக்கும் 350பேரை தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்தவாரம் ஆரம்பமாகும்

[8-ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், சைக்கிள், தட்டச்சு இயந்திரம், Electrical goods, Play pen, Walker etc உடன் விற்பனைக்குண்டு. 66, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3701

3 பரப்புக்காணியுடன் சகல வசதிகளும்கூடிய கல்வீடு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; சு. கந்தையா, நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். 3731

BROILERS இறைச்சிக் கோழிகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம் நல்லூர் வீடியோ சென்டர், 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரை சந்தையடி, நல்லூர். 3741

நல்ல நிலையிலுள்ள 6 Sri Volkswagon [1300] கார் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 32, கச்சேரி-நல்லூர் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 3746

மாவிட்டபுரம், மயிலிட்டி வீதி ஓரமாக பளை வீமன்காமம் ப. நோ. கூ. சங்கத்திற்கு அருகாமையில் வீடு, தொழிற்சாலை அமைக்கக்கூடிய 27 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் விற்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: மு. சிவசம்பு, அம்மன் வீதி, வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை. 3684

## விற்பனைக்கு

பரந்தன் 3ஆம் வாய்க்காலில் 6½ ஏக்கர் இரு போகமும் செய்கை பண்ணக்கூடிய நெல்வயல் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். நவரத்தினராசா, 18, 1ஆம் ஒழுங்கை, ஊரெழு கிழக்கு, சுன்னாகம். 3723

பலாலி ரோட் வசாவிளான் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் தொழிற்சாலை, வீடு கட்டக்கூடிய 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பிரித்துக் கொடுக்கலாம். ''ஸ்ரீ நிலையம்'' குரும்பசிட்டி, தெல்லிப்பழை. 3724

வவனியா-மன்னார் வீதியில் நகர எல்லைக்குள், வீட்டுடனும், மின்சார வசதியுடனும் ஐந்து ஏக்கர் மேட்டுநிலம் விற்பனைக்கு உள்ளது. பிரதான வீதியிலிருந்து சற்று உள்ளே அமைந்த இக்காணி, மில் அல்லது தொழிற்சாலை அமைக்கவோ, விவசாயம் செய்யவோ மிகவும் ஏற்றது. ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்க; விளம்பரதாரர், M 12, மே/பா dyn ads 476, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 3743

## தேவை

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஒரு பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு இரும்பு வியாபாரத்தில் அனுபவமும் நம்பிக்கையும் வாய்ந்த முதலீடு செய்யக்கூடிய பங்காளர் தேவை. விபரங்கட்கு: விள. இல:3702, மே/ப. ஈழநாடு, யாழ்ப்பாணம். (3702

## கமிஷனுக்கு

யாழ் சின்னக்கடைச்சந்தை கிழக்கு வீதியில் நல்ல நிலையில் நடைபெற்று வரும் பலசரக்குக் கடை ஒன்று கமிஷனுக்குக் கொடுக்கப்படவுள்ளது. தொடர்பு! திரு. B. C. பாலசிங்கம், இல. 3, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 3739

## காணவில்லை

ஒரே ஊரில் வசிப்பவர்களும் வயது 14, 13, 12 உடைய ஒரு பெண் இரு ஆண் வேலைக்காரப் பிள்ளைகளும் 10-6-85 தொடக்கம் காணமல் போய்விட்டார்கள், இவர்களைக் கண்டவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். திருமதி சொர்ணமலர் கணபதிப்பிள்ளை, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. 3749

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பர் பொன்னையா என்பவரின் மரணசாதனமில்லா சொத்தின் விடயத்தில்

-மரணமெய்தியவர்

மரணசாதன )

இல. 3512

நியாயாதிக்கம் )

பொன்னையா பழனிமலை ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம்.

-மனுதார்

மேற்குறித்த இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேற்குறித்த இறந்தவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காகவும் வழக்குப் பாதுகாவலரை நியமிப்பதற்கும் இந்நீதியன்றிற் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு மாசி மாதம் 22ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றிற் தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தாற் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு தை மாதம் 4ம் திகதி.

கு. குலசிங்கம்
பதிவாளர்,
யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றம்.

காரணம் காட்டும் திகதி 14-6-1985க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்
பதிவாளர்.

W. S. செந்தில்நாதன்
மனுதாரின் சட்டத்தரணி
3733

## குத்தகைக்கு

நான்கு அறைகளுடன் கூடிய புதிய வீடு சகல வசதிகளுடனும் உடனடியாக ஒத்திக்கு விடக்கூடிய நிலையில் உண்டு விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 57, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 3716

## வைத்தியம்

ஜவனப்பிரகாச லேகியம்; இயற்கையான உயிர்ச்சத்து சிநிறைந்தது. தினம் உபயோகித்து வர வளரும் சிறுவர்க்கும், வயோதிபர்க்கும் நாட்பட்ட இருமல், குரல் கம்முதல், மெலிவு, நரம்புத் தளர்ச்சி, பலவீனம், இளமையில் முதுமையடைதல் நீங்கி, ஞாபக சக்தியையும், இரத்த விருத்தியும், மனோதிடத்தையும் ஊட்டும் பிரசித்தமான ஆயுர்வேத டானிக். எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும் மங்களபதி தயாரிப்பை கவனித்து வாங்கவும். Dr. மங்களாம்பிகை D.A.M, மங்களபதி வைத்தியசாலை, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். 3600

நடராசாவும் சபாநாதனும்
சட்டத்தரணிகள்,
வட்டுக்கோட்டை.

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

இல: தத்துவம்/237

பொன்னாலையைச் சேர்ந்த காலம்சென்ற சின்னப்பு பொன்னம்பலம் என்பவரது மரணசாதனம் இல்லாத சொத்துக்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

-மரணமெய்தியவர்

பொன்னம்பலம் கைம்பெண் ஆச்சிமுத்து,
பொன்னாலை, சுழிபுரம்.

மனுதாரர்

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 26ஆம் நாளன்று 9 முற்பகல் மணிக்கு இந்த நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1985ம் ஆண்டு பங்குனி மாதம் 26ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்,
மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்.
3735

## COLOMBO-BERLIN

ஒருவழி 15,000/-

17, 22, 24, 29 ஆம் திகதிகளில் விசேஷசேவை

1. யாழ்ப்பாணத்திலிருந்து BERLIN வரை எமது பிரதிநிதி ஒருவர் கூட்டிச்செல்வார்.
2. கொழும்பில் பாதுகாப்பான தங்குமிடவசதி.
3. பாஸ்போட், பொண்ட் மற்றும் பயண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:

S. வரன்,
நீங்குவில்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
3737

S. நேசன்,
127, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ். மரியா ஹோட்டலுக்கு அண்மையிலுள்ளது.)

## பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின்

## பழைய மாணவர் சங்கம்

எமது பாடசாலையின் இன்றைய நலன் நோக்கி பழைய மாணவர் சங்கத்தைப் புனரமைக்க உத்தேசித்துள்ளோம். மேற்படி சங்கக்கூட்டம் வட இந்து மகளிர் கல்லூரியில் எமக்குரிய பகுதியில் 15-06-85 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

3744 அதிபர்.

## "யாழ். மருத்துவச் சங்கம் ஆண்டுப்பொதுக்கூட்டம்"

சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (15-06-85) காலை 11-00 மணிக்கு, யாழ். அரசினர் வைத்தியசாலை, மருத்துவ விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். இத்தகவலை சகல அங்கத்தவர்களும் கவனிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

செயலாளர்,
யாழ். மருத்துவச்சங்கம்.

3736

## 31-ம் நாள் நினைவஞ்சலி

12-06-1985

திருமதி திருநாமம் அந்தோனிப்பிள்ளை

அன்னை மடியில்: 27-01-1935
ஆண்டவனடியில்: 12-05 1985

ஆறுத திங்களொன்று கடந்ததம்மா
அந்தரிக்க விட்டெனை நீ சென்றபின்னே
எந்நாளும் எப்பொழுதும் மறந்ததில்லை
எழிலான உன்னுருவம் எண்ணுந்தோறும்
கள்ளமிலா உனதன்பைக் கருதும்போதும்
உள்ளமெலாந் துடிதுடித்தே உருகுகின்றேன்
விண்ணிருந்தே என்குரலைக் கேட்டிடுவாய்
விருப்புடனே எனக்காக வேண்டிடுவாய்

அன்புக் கணவர்.

சென்மேரிஸ் லேன்,
பண்டத்தரிப்பு.
3742

## வீடியோ புளோசம்

இன்றைய வெளியீடு

(1) சுராகனி (தோம்சன்), கமல் சிலுக்கு, தேங்காய், வசந்தா, லூஸ் மோகன்
(2) கறுப்புச்சட்டை (கமெரா)
(3) படிக்காத பண்ணையார் சிவாஜி, பிரமிளா.

உங்கள் பிரதிகளுக்கு ஆடர் செய்யுங்கள்
சிறந்த வீடியோ படப் பிடிப்புக்கும், புகைப் படப்பிடிப்புக்கும் தொடர்பு கொள்ளுங்கள்:

VIDEO BLOSSOMS
ரூபநிதி ஸ்ரோர்ஸ்
C. S K கட்டிடம், சத்திரச்சந்தி.
30, சிவப்பிரகாசம் வீதி
யாழ்ப்பாணம். Tel: 24277. (3734)

## COLOMBO - BERLIN பிரயாணம்

17, 21, 24ந் திகதிகளில் பிரயாணம் செய்பவர்கள் உடனடியாகப் பதிவுசெய்துகொள்ளவும்.

முன்பணம் அவசியமில்லை.

கொழும்பில் தங்குமிட வசதி, மற்றும் பாஸ்போட், பொண்ட், விஸா, பிரயாணக் காசோலைகள் பெறுவதற்கான உதவிகள் செய்துகொடுக்கப்படும்.

லிப்ருஸ் லிமிட்டெட்,

R. G. பில்டிங், 70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

COLOMBO

LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET,
COLOMBO-1

# பாரிஸ் 'இந்தியவிழா'வைக் கண்டித்து

# புதுடில்லியில் அமைதிஆர்ப்பாட்டம்!

புதுடில்லி, ஜூன் 11

பாரிஸில் இடம்பெற்ற 'இந்தியவிழா'வுக்கு எதிராக புதுடில்லியில் நேற்று அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது இதில் எதிர்க்கட்சிகளின் ஆதரவாளர்கள் உட்பட சுமார் 500 தொழிலாளர்கள் பங்குபற்றினர்.

'இந்தியவிழா' பிரான்ஸில் இடம்பெறுகின்றபோதிலும் இந்தியத் தொழிலாளர்களின் நலன் இந்தியாவில் புறக்கணிக்கப்படுகின்றதென இந்த ஆர்ப்பாட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான ஜனதாஇந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. புதுடில்லியிலுள்ள 'தாஜ்' ஐந்து நட்சத்திர ஹோட்டலிலேயே ஆர்ப்பாட்டகாரர்கள்கூடி பிரான்ஸ் இந்திய விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த ஹோட்டலில் கூடிய சுமார் 500 ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியதையடுத்து தேநீர் அருந்திய பின்னர் அமைதியாக அங்கிருந்தும் அகன்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: ''எமது தலைவர் (பிரதமர் ரஜீவ்) விமானங்களை வாங்கவும், இந்தியகலாச்சாரத்தை விற்கவும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

இந்திய கலாச்சாரம், மற்றும் உற்பத்திகளுக்கு பிரான்ஸில் பெருமளவு முக்கியத்துவம் கொடுத்து விளம்பரம் செய்யப்பட்டது. ஆனல் இந்தியத் தொழிலாளரின் வாழ்க்கைத்தரம் மிகவும் கவலைக்குரியதாக இருக்கின்றதென்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பிரதமர் ரஜீவ் காந்தி இந்தவார இறுதியில் அமெரிக்காவிலும் 'இந்திய விழா' ஒன்றை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (கி)

## ஆபிரிக்கப்பட்டினிக்கு பிரிட்டிஷ் 'பொப்'கலைஞர்கள் நிதி வசூல் நிகழ்ச்சி!

லண்டன், ஜூன் 11.

ஆபிரிக்கப் பட்டினிக்கு நிதி சேகரிக்கும் வகையில் பிரிட்டனில் 'பொப்இசை'க் கலைஞர்கள் வசூல் நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளனர்.

'பாண்ட் எய்ட்' என்ற இவ் வசூல் நிகழ்ச்சியில் பல முன்னணி பிரிட்டிஷ் பொப்இசைக் கலைஞர்கள் இசை நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் முன்னணிப் பொப் இசைக் கலைஞர்களும் கூட்டாக இணைந்து ஆபிரிக்கப் பட்டினிக்கு நிதி சேகரிக்கும் பாடல் நிகழ்சியொன்றைத் தயாரித்தனர்.

இப்பாடல் நிகழ்ச்சி இசைத்தட்டுக்களில் பதிவு செய்யப்பட்டு பெருமளவில் விற்பனைக்கு விடப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டது. (கி)

அமெரிக்காவில்

## நீர்மூழ்கி — மீன்பிடிக் கப்பல்கள் மோதல்!

லண்டன், ஜூன் 11.

பிரிட்டனின் நீர்மூழ்கிக் கப்பலொன்று அமெரிக்காவின் மீன்பிடிக் கப்பலொன்றுடன் நேற்று மோதியது. இவ் விபத்தில் 4 மீனவர்கள் காயமடைந்தனர்.

அமெரிக்காவின் 'புளொரிடா' குடாப் பகுதியில் 'எச். எம். எஸ். ரெஸொலூஷன்' என்ற அந்த பிரிட்டிஷ் நீர்மூழ்கி ஒத்திகையொன்றில் ஈடுபட்டிருந்தது.

போலியான அணுசக்தி ஏவுகணையொன்றைச் செலுத்திப் பரிசோதிப்பதே அந்த ஒத்திகையாகும்.

ஒத்திகை ஆரம்பமாவதற்கு முன்னரே அம்மோதல் இடம் பெற்றது. ஆயினும் அது திட்டமிட்டவாறு மேற்கொள்ளப் பட்டது. நீர்மூழ்கிச் சிப்பந்திகள் எவருக்கும் காயமேற்படவில்லையென்று கூறப்பட்டது.

இந்த ஒத்திகையைத் தடை செய்ய நாசவேலைகள் எதுவும் இம் மோதல்மூலம் ஏற்படுத்தப்பட்டதாவெனவும் தீவிரமாக ஆராயப்பட்டுவருகிறது. (கி)

## கண் சிகிச்சை பெறுவோர் தொகை திடீர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரித்துள்ளது. நேற்று நூற்றுக்குமேற்பட்ட கண் கண்நோயாளிகள் காணப்பட்டனர்.

தற்போது கண்வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி ஐ. கண்ணுத்துரை மட்டுமே கடமையாற்றுகின்ருர். மற்றுமொரு வைத்திய நிபுணரான டாக்டர் எஸ். நிர்மலானந்தன் சில மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றுவிட்டார். அவருக்குப் பதிலாக வேறு எவரும் நியமிக்கப்படவில்லை.

தூர இடங்களிலிருந்துவரும் கண் நோயாளிகள் போக்குவரத்துக் கஷ்டங்களால் தாமதமாக வரநேரிடுவதால்பலத்த கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். (ஈ)

## ✯ இந்திய– பாக் எல்லையைக்கடந்த 4 பாகிஸ்தானியர்கள் சுடப்பட்டு மரணம்!

புதுடில்லி, ஜூன் 11

இந்திய-பாக் எல்லையைக் கடந்து பஞ்சாப்பினுள் ஊடுருவ முயன்ற நான்கு பாகிஸ்தானியர்கள் கடந்த வாரம் இந்தியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பி டி ஐ செய்தி ஸ்தாபனம் இத்தகவலைவெளியிட்டுள்ளது அந்த நான்கு பாகிஸ்தானியர்களும் ஒற்றர்கள் அல்லது கடத்தல்காரர்கள் என்றும் அச்செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்தது.

பஞ்சாப்மாநிலத்தில் தோன்றியுள்ள நெருக்கடி நிலையையடுத்து இந்தியாவையும், பாகிஸ்தானையும் பிரிக்கும் இம்மாநிலத்திலுள்ள எல்லைப் பகுதி பலத்த கண்காணிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இக் கண்காணிப்பையும்மீறி சட்டவிரோதமாகவே அப் பாகிஸ்தானியர்கள் இந்தியாவினுள் நுழைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பஞ்சாப் சீக்கிய தீவிரவாதிகளுககு பாகிஸ்தானிலிருந்தே ஆயுதங்கள் கொண்டுவரப்படுவதாக இந்தியா குற்றஞ்சாட்டி வருகின்றது. அத்துடன் பஞ்சாப் நெருக்கடியை மேலும் சிக்கலாக்க பாகிஸ்தானிய ஒற்றர்கள் அடிக்கடி இந்திய எல்லையைக் கடப்பதாகவும் கூறப்பட்டது. (கி)

கொள்ளைகளின் எதிரொலி:

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை மூடப்படும் அபாயம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம் மூடப்படும் நிலை உருவாகலாம். ஆகவே கொள்ளைகளை நிறுத்த உதவுமாறு மேற்படி தொழிற்சாலை முகாமையாளர் சுற்றுநிருபம் மூலம் தொழிலாளர்களைக் கோரியுள்ளார்.

மேற்படி சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''எமது தொழிற்சாலையில் கடந்த சில காலமாக நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களினல் தொழிற்சாலை மூடப்படும் ஆபத்து நெருங்கியுள்ளது என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்ள வேண்டியுள்ளது

இன்றைய சூழ்நிலையில் பலதரப்பட்ட இன்னல்களுக்கு மத்தியிலும் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பால் தொழிற்சாலை ஓரளவு இயங்கிவருகின்றது. தொடர்ந்தும் இதே போன்ற கொள்ளைகள் எமது தொழிற்சாலையில் நடக்குமேயானல் எமது தொழிற்சாலை எந்நேரத்திலும் மூடப்படலாம்.''

## சிறுவர்களைக் காணவில்லை

[யாழ்ப்பாணம்]

நுணுவிலுள்ள வீடொன்றில் இருந்த மூன்று வேலைக்காரச் சிறுவர்களான ஒரு சிறுமியும், இரு சிறுவர்களும் காணுமல்போய் விட்டதாகக் கூறபபடுகிறது.

## சந்தேகநபர் கைது

(கொழும்பு)

பம்பலப்பிட்டி 8 ஆயிரம் ரூபா கொள்ளை தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் மற்றும் சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனர் (ஈ)

## சிலமணிநேர பதற்றம்!

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் பகுதியில் நேற்று முன்தினம் காலை திடுதிப்பென சீருடையினர் வீட்டு வளவுக்குள் புகுந்தமையால் மக்கள் பெரிதும் அச்சமடைந்தனர்.

மயிலிட்டி வீதியில் மாவிட்டபுரம் வந்த அவர்கள் மாவிட்டபுரத்திலிருந்து காங்கேசன்துறை செல்லும் வழியில் திடீரென வீட்டு வளவுக்குள் புகுந்து கொள்ளவே மக்கள் கலவரமடைந்தனர்.

ஆனுலும் அவர்கள் மக்களை பயப்படவேண்டாம் எனக்கூறி பல வளவுகளைத் தாண்டி பின்னர் வாகனங்களில் ஏறிச் சென்றுவிட்டனர்.

இதன்காரணமாக மாவிட்டபுரம் பகுதியில் சிலமணி நேரம் பதற்றம் நிலவியது.

## தனிமையில் நின்ற பெண் குழந்தை

[வவனியா]

சுமார் ஐந்துவயது மதிக்கத்தக்க பெண்குழந்தையொன்று வவனியா - கண்டி வீதியில் தேனீர் சடையொன்றின்முன் துணையின்றி தனிமையாகநிற்க கண்டுபிடிக்கப்பட்டு வவனியாவில் உள்ளது.

''வாப்பா உம்மா'' என்றே தனது பெற்ருேரை தான் கூப்பிடுவதாக இக்குழந்தை கூறுவதால் இப்பிள்ளை ஒரு முஸ்லிம் குடும்பத்து குழந்தையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் வீடு இருப்பதாகவும், தாய் மீன் வியாபாரம் செய்வதாகவும் அது கூறுகின்றது.

வாப்பாவுடன் கூடிவந்ததாகவும் வாப்பா பீடி வாங்க கடைக்கு போனதாகவும் தெரிவித்தது. இப் பிள்ளையினை தவறவிட்டவர்கள் கண்டி வீதியிலுள்ள அஜந்தா ஸ்ரூடியோவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## வருடாந்த உற்சவம்

(மாவிட்டபுரம்)

பளை -வீமன்காமம் தையிட்டி ஞானவைரவர் வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

விசேட அலங்கார உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்.

ஆடம்பரமின்றி அமைதியாக உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன

A/L 87

ஆரம்பம்: 15-06-85

சனி காலை 9-30 மணி

(விஞ்ஞான பாடங்கள் மட்டும்)

(எமது வழமையான ஆசிரியர்கள்)

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, Jaffna.

தூய, பிரயோக கணிதம்

திரு. நல்லையா

86, 87 புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 15-06-85
சனிக்கிழமை

விபரங்கட்கு:
New Master Institute
B. M. C. Lane, Jaffna.

### மணிவாக்கு

எங்கள் பட்டினத்தில் உள்ள முட்டாள்கள் எல்லோரும் எங்கள் பக்கம் அல்லவா? எனவே பெரும்பான்மை வெற்றி எங்களுடையதே?

— மார்க்டுவெயின்

# நமது நோக்கு

## நெடுந்தீவில் நடப்பதென்ன?

நெடுந்தீவு படகுச் சம்பவத்தை நினைக்கவே நெஞ்சம் நடுங்குகின்றது. மூன்று வயதுள்ள பெண் குழந்தை உட்பட சுமார் 34 பேர் அன்று கடலில் நடந்த கொடுமைக்குப் பலியானார்கள்.

இறந்தவர்களில் அதிகமானோர் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் என்பதால் அந்த ஊரே ஒருமாத காலத்தைத் துக்க தினமாகக் கொண்டாட வேண்டிய கடப்பாடுடையது.

எமது சமூகத்தை மட்டுமல்ல நாகரிக உலகத்தை அதிரவைத்த சம்பவம் இதுவென்பதால் பிராயச்சித்தம் எவ்வாறு அமையும்?

சாதாரண காலத்திலேயே நெடுந்தீவு யாழ். மாவட்டத்திலிருந்து ஒதுங்கியிருக்கும் ஊராகக் கணிக்கப்படுகிறது. இதனை நீக்க அரசாங்க நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டும் நிலைமையில் உருப்படியான மாற்றம் காணப்படவில்லையென்றே கொள்ள வேண்டும். முன்னேற்றம் இல்லாமல் இல்லை என்பதும் மறுப்பதற்கில்லை.

கல்வித்துறையை நினைக்கும்போது அந்த ஊருக்கும் மக்களுக்கும் மக்களின் மாணவர்க்கும் தம்மை முற்றாக அர்ப்பணித்த ஆசிரியப் பெருந்தகை அமரர் சி. வீ. ஈ. நவரத்ன சிங்கம் நினைவுக்கு வருகின்றார்.

யாழ்ப்பாணம் இளவாலையில் ஒரு பிரபல குடும்பத்தைச் சேர்ந்த இப்பெரியார் நெடுந்தீவில் ஆசிரியப்பணி தொடங்கிய காலம் தொட்டு இளைப்பாறும் வரைக்கும் அந்த ஊரின் காவலனாகவே வாழ்ந்துவந்தார்.

நெடுந்தீவு படகுச்சம்பவம் அறிந்ததும் அவருடைய சாந்தி நிச்சயம் குழப்பமடையும்.

அதற்குமேல், சம்பவம் நடந்து இன்று ஒருமாதமாகிவிட்டது. பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடப்பதும், ஆசிரியர் இதனைச் சாட்டாகக் கொண்டு வெளியூரில் நீண்டகால லீவில் இருப்பதும் அமரருக்கு ஆத்திரம் ஊட்டும்.

குறிகாட்டுவான் —நெடுந்தீவுக்கு ஐம்பது சதத்தில் ஓடிய படகு இன்று பதினைந்து ரூபாயில் ஓடுவதும் படகுச் சம்பவத்துக்கு ஒருவித பிராயச்சித்தமா?

அரச அதிபர் கூட்டிய மகாநாட்டில் நெடுந்தீவுக்குரிய சகல சேவைகளும் புனரமைக்கும் திட்டம் கடந்தவாரம் பூரணப்படுத்தப்பட்டது.

வெளிஊரிலிருந்து சேவைக்குவரும் பல திணைக்கள உத்தியோகத்தர்கள் கடமைப் பற்றுடையவர்களாக, விசேட கவனத்துடன் பணிபுரியும் வேளையில், உள்ளூர் வாசிகள் தமது கிராமம், தமது பாடசாலை உணர்வு மிகுந்திருக்க வேண்டிய கட்டத்தில், ஊர் திரும்பாதிருப்பது விசனத்துக்குரியது.

தனிநாயக அடிகளார் தோன்றிய பழமை மிகுந்த இந்த நாடு முற்போக்குடைய ஆட்சியில் தமிழ்மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக பலதுறைகளில் பிரகாசிக்கும் தன்மையுடையது.

அமரர் நவரத்னசிங்கத்தின் முழு உருவச்சிலை ஒன்று தீவின்துறைமுகத்தில் நிறுவுவது நலம்.

## வாத்தியம் மத்தளம்; ராகம் மோகனம்

உணவுப் பொருள் தட்டுப்பாடு; மருந்து கிடைக்கவில்லை; எரிபொருளுக்கு என்ன செய்வது போன்ற அடி ஒருபக்கம், பெற்றோல் கொள்ளை; மருந்துகள் மாயமாய் மறைந்தன; அரிசி மூடைகள் அபேஸ் போன்ற அடி மற்றப்பக்கம்.

மத்தளம் என்ன செய்யும்? முஹாரி ராகம் பாடுவதால் எடுத்த காரியம் கை கூடாது; யாழ்ப்பாணத்தில் சோகம் ஒரு நிரந்தர உணர்வாய் விட்டதால், அது நிச்சயம் "போர்" அடிக்கும். மேலும் கவலை நீங்கும் காலம் வராதோ என்று தவிக்கும் மக்களுக்கு நம்பிக்கை ஒளி அவசியம்.

எனவே இரண்டு பக்கத்திலும் அடிபடும் யாழ். அரசாங்க அதிபர் உருக்கமான வேண்டுகோள் ஒன்று விடுத்திருக்கிறார்.

இத்தகைய வேண்டுகோள் இதுதான் முதல்முறை என்றில்லை. ஆனால் உணவுக்குரிய அரிசி மூடைகள் 404- ஒரு நவீனகார் மொடல் நம்பர் - கொள்ளையடிக்கப் பட்டதால் ஏற்படும் இடைஞ்சல்கள் எவருக்கும் எளிதில் விளங்கும்.

பொருள் போனஇடம் புண்ணியமென்றும், அரிசி போகுமிடம் அன்னதானம் என்றும் கொள்வது இன்றைய நிலையில் மக்கள் விரோதமான மனப்போக்கு.

அரைவயிற்றில் வாழும் மக்கள் முழுப்பட்டினியில் வாழவேண்டிய நிலைக்கு எவரும் உடந்தையாக இருக்கலாகாது.

பசிக்கு உதவாதார் எதற்கு உதவுவார்.

# யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சூழல், பாதுகாப்புபிரச்னைகள்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(தலைவர் புவியியற்றுறை. யாழ் பல்கலைக்கழகம்)

பொருளாதார அபிவிருத்தியுடன் சூழல்காப்பு முக்கியமானதொரு விடயமாக இருக்கிறது. சூழல் காப்பின் தேவையை வலியுறுத்தவே ஜூன் 5ம் திகதி சர்வதேச ரீதியில் சூழல் தினம் கொண்டாடப்பட்டது 1972ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச ரீதியில் சூழற்காப்பு நடவடிக்கைகள் குறிப்பாக விருத்தியுற்ற நாடுகளில் அதிகரித்து வந்ததைக் காணலாம் சர்வதேச நிறுவனங்களாலும், தேசிய நிறுவனங்களாலும் சூழல் காப்பு, மேம்பாடு குறித்து பல பொது வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இலங்கையில் தேசிய மட்டத்தில் மத்திய சூழல் அதிகார சபையும், பிராந்திய மட்டத்தில் மாவட்ட சூழற் சபையும் சூழல் காப்பு தொடர்பான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இன்று நாட்டில் புதிய அபிவிருத்தித்திட்டங்கள் ஏற்படுத்த முற்படும் பொழுது அத்திட்டங்களினால் ஏற்படக்கூடிய சூழல் தாக்கம் பற்றிய மதிப்பீடு முக்கிய கவனத்துக்கு எடுக்கப்படுகிறது. துரித மகாவலித் திட்டத்தில் சூழல் காப்புக்கு மிக முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது,

### யாழ்ப்பாணத்தில் சூழற் பிரச்னை

யாழ்ப்பாண மாவட்டம் இன்று அரசியல் சமூக பொருளாதாரப் பிரச்னைகளுடன் பல சூழற் பிரச்சினைகளாலும் பெரிதும் பாதிப்புள்ளாகி வருகின்றது. இப்பகுதியின் இயற்கைவளங்கள் சரியான முறையிலும் பயன்படுத்தப் படாததாலேயே இந்நிலையேற்பட்டுள்ளது வளங்கள் துரிதமாக குறைவடைந்துசெல்லல், தரம் குன்றுதல், சூழல் மாசுபடுதல் போன்றன முக்கிய பிரச்சினைகளாக இருக்கின்றன இம் மாவட்டத்தில் நிலம், நீர், மண், தாவரம், கடல்வளம் ஆகியவற்றின் பயன்பாட்டிலும் கைத்தொழில் மற்றும் கிராம நகரக் கழிவுகளை வெளியேற்றம் செய்தலுடன் தொடர்பாகப் பலசூழற் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பிரதேசம் இலங்கையின் சிறப்புப் புவியியற் பிரதேசங்களில் ஒன்றாகும். இம் மாவட்டம் 13 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகவும் 149 கிராமசேவர் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த நிலப்பரப்பு953 சதுர கிலோ மீற்றர் இம் மாவட்டம் 1981இல் 838 787 பேரைக் கொண்டிருந்தது. பிரதேச ரீதியில் மாவட்டத்தின் குடிசனத்தொகை விபரங்கள் பின்வருமாறு;

| பிரதேசம் | பரப்பு (சதுர கிலோ மீற்றரில் | 1981இல் சனத்தொகை | குடிசனடர்த்தி [சதுரகிலோ மீற்றருக்கு] |
|---|---|---|---|
| தீவுகள் | 201 | 82110 | 409 |
| பெரிய யாழ்ப்பாணம் | 46 | 159600 | 3470 |
| வலிகாமம் | 276 | 304630 | 1104 |
| தென்மராட்சி | 197 | 71545 | 363 |
| வடமராட்சி | 223 | 120 689 | 541 |
| மாவட்டம் | 953 | 738,787 | 775 |

சராசரியாக குடிசன அடர்த்தி மிகவும் கூடுதலாக இருப்பதுடன் மிகவும் செறிவானதும் சிக்கலானதுமான நிலப்பயன்பாடுகள் காணப்படுகின்றன

இப்பிரதேசத்தில் கிணற்று நீர்பாசனத்தை அடிப்படையாகக்கொண்ட பயிர்செய்கை காணப்படுகின்றது. சனத்தொகை அதிகமாக இருப்பதால் இங்கு வளங்கள் மிகவும் கவனமாகப் பயன்படுத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. அவ்வாறு செய்யாததால் பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன முக்கிய சூழற்பிரச்சினைகள் பின்வருமாறு;

### சுண்ணும்புக்கல்

சுண்ணும்புக் கல்லே யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதான கனிப்பொருளாகும். பாரிய சீமெந்துத்தொழிற்சாலை காங்கேசன்துறையில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலைக்கு தேவையான சீமெந்து காங்கேசன்துறை சூழலில் பெருமளவு அகழ்ந்து எடுக்கப்படுகிறது இவ்வகழ்வு வேலையால் காங்கேசன்துறையின் தரைத்தோற்றம் பெரிய மாறுதல்களுக்கு உட்பட்டுவருகின்றது. மேலும் வீதியமைப்புக்கும் கட்டிடத் தேவைகளுக்கும் பெருமளவு சுண்ணும்புக்கல் அகழ்ந்து எடுககப்படுவதால் குடாநாட்டின் சுண்ணக்கல் வளம் குறைவடைந்து வருவதினை காணலாம். வீதியமைப்பு கட்டிட தேவைகளுக்கு வேறு பிரதிப்பொருட்களைப் பயன்படுத்துவதால் சுண்ணும்பு பெருமளவு பாவிப்பதனைக் குறைக்கமுடியும்.

### மணலும், மண்ணும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மணலும், மண்ணும் பலவிடங்களில் கட்டுப்பாடற்றமுறையில் எடுக்கப்படுவதால் நிலக்காட்சியில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அல்லைப்பிட்டி, மண்கும்பான், சாட்டி, அரியாலை, மணல்காடு போன்ற கிராமங்களில் இந்நடவடிக்கையால் கடுமையான சூழற்பிரச்சினை தோன்றியுள்ளது. குறிப்பிட்ட கிராமங்களில் காணிக்காரர் பலர் குறுகிய லாபம் நோக்கம்கொண்டு காணிகளில் மிகவும் ஆழமாக மணலை எடுத்து விற்கின்றார்கள். இதனால் பாரிய கிடங்குகள் ஏற்பட்டுவருவதுடன், இக்காணிகளை வேறு ஏதும் பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதும் கடினமாகவுள்ளது பனை மற்றும் மரங்கள் யாவும் வேர் பாறுண்டுவிழுந்துவருகின்றன. இவ்வகழ்வு வேலையால் தாவரங்களையும் முற்றாக இழக்க நேரிடும். கடற்கரைப்பகுதிகளில் மணல் எடுக்கப்படுவதால் கடல் நீர் உட்புகுவதும், கடலரிப்பும் ஏற்படுகின்றன. தரைநிலப்பகுதிகளில் கூடுதலாக மண்எடுப்பதால் பாரிய கிடங்குகள் ஏற்பட்டுவருகின்றன. மேலும் தீவுப்பகுதித் தரவைப் பகுதிகளில் அண்மைக்காலத்தில் சிப்பியகழ்வதால் நிலத்தோற்றத்தில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்படியகழ்வு நடைபெற்ற இடங்கள் சமதரையாக இல்லாமல் மேடும் பள்ளமுமாக மாறிவிட்டன மேச்சல் நிலங்கள் பாழடிக்கப்பட்டுவருகின்றன.

### செம் மண் பிரதேசம்

வலிகாமம் பகுதியில் காணப்படும் செம்மண் பிரதேசம் சிறந்த நீர்வளமும், மண்வளமும் மிக்கது. நல்ல விவசாயப் பிரதேசம். பலவகைப்பட்ட பயிர்வகைகள் செய்யப்படுகின்றன. ஆனல் அண்மைக்காலத்தில் குடிசனப் பெருக்கத்தாலும், நகராக்கத்தாலும் மிகவும் சிறந்த தோட்ட நிலங்கள் வீடுகட்டுவதற்கும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படடுவருகின்றன. இத்தகைய நிலமாற்றப் போக்கு யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயப் பொருளாதாரத்தை பெரிதும் தாக்கும். மிகவும்சிறந்த செம்மண் பிரதேசம் வேறு தேவைகளுக்கு மாற்றப்படுவதை தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். வீடமைப்பு, கைத்தொழில் அமைவுக்கு குடாநாட்டிலோ அல்லது வெளியிலோ மாற்ற நிலங்களைப்பெற்றுக் கொடுக்கலாம்.

### நீர்வளம்

யாழ்ப்பாணக் குடாநாடு தரை நீர்வளம்மிக்கதொருபிரதேசம். நீர்பயன்பாடு அதிகரிப்பாலும்; ஒழுங்கற்ற பாவனையாலும் பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. நீர் உவர்த்தன்மையடைதல், மாசுபடுதலுடன்,மேற்பரப்பு குளங்கள், குட்டைகளும் தூர்ந்தும் அழிந்துபோகும் நிலைகள் ஏற்பட்டுள்ளன. நீர் உவராகுவதற்கு பல காரணங்கள் உண்டு. நீர் இறைப்பதற்கு கூடுதலாக யந்திரங்கள் பாவிக்கப்படுவதால் குறுகிய நேரத்தில் கூடிய நீரை வெளியேற்றுவதாலும் கிணறுகள் கூடுதலாக ஆழமாக்கப்படுவதாலும், வறண்ட காலத்தில் நீர்பாசனப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதாலும் நீர் உவர்த் தன்மையடைகின்றது. தீவுப் பகுதிகள், தென்மராட்சி மேற்கு. கரவெட்டி, அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் நீர் உவர்த் தன்மையடையும் தன்மை அதிகரித்துவருகின்றது. மேற் குறிப்பிட்ட பகுதிகளில் குடிநீர் மிகவும் பெரிய பிரச்னையாக இருக்கின்றது. வீடுகள் மற்றும் கைத்தொழில் நிறுவனங்கள் சிறிய நிலப் பரப்புகளுள் அமைக்கப்படுவதால் கிணறும், கழிவுநீர் இடங்களும் கிட்டக் கிட்ட இடவமைவு பெறும் இயல்பு அகரித்துள்ளது. இதனல் கிணற்று நீர் மாசுபடும் இயல்பு மக்கள் நெருக்கமாக வாழும் நகர்ப்புறங்களில் கூடுதலாக ஏற்பட்டுள்ளது. இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு முதலில் நகர்ப் பகுதிகளில் குளாய் நீர் விநியோகமும், சிறந்த கழிவு நீர் வெளியேற்றல் முறைகளும் விருத்தியாக்குவதே இதற்கான

(5-ம் பக்கம் பார்க்க)

★ நானை புனித அந்தோனியார் திருவிழா

## அந்தோனி முனியவனே அனைவர்க்கும் இனியவனே

நீலக் கடலோரம் நின்றருள் புரிபவனே
நாளும் ஒருகோடி புதுமைகள் செய்பவனே—எம்
கோலம் கண்டுநீயும் கூரிருள் நீக்காயோ
ஓலமிட்டழுகின்றோம் ஓரருள் புரியாயோ.

கடலலையும் அருவிகளும் காற்றோடு கதிரவனும்
கருணைத் தேவனவன் அருளைப் பாடாதோ - எம்
உடனலையும் துன்பங்கள் உடன் கலைந்தோடாதோ
உள்ளத்தில் ஓரமைதி வெள்ளந்தான் பாயாதோ.

அந்தோனி முனியவனே! அனைவர்க்கும் இனியவனே!
அந்தரித்து வருவோரை ஆதரித்துக் காப்பவனே -உன்
முன்னோடி, முகந்நாடி, முழுவாழ்வு நாம்தேடி
வந்தோமே வரமளிநீ; வணக்கங்கள் பலகோடி.

—அ. அமிர்தருஜ்

# இராணுவமுகாம் பகுதியிலிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் அதேஇடத்தில் வசிக்க அனுமதி!

## பிரிகேடியர் வணசிங்கா ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமின் வடக்குப்பகுதியிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும்பழைய இடங்களில் வசிபபதற்கான ஏற்பாட்டை யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் வணசிங்கா செய்துள்ளார்.

மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழுவினரால், இவ்விடயம் முதலில் யாழ். அரசாங்க அதிபரின் கவனத்திற்கும் பின்னர் இணைப்பு அதிகாரியின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது.

இதைத் தொடர்ந்து இணைப்பு அதிகாரி பிரிகேடியர் வணசிங்கா, குடியேற்றத்திட்டத்தில் மக்கள் வெளியேறிய இடத்தைப் பார்வையிட்ட பின்னர் மீண்டும் அவ்விடத்தில் வசிக்க அனுமதி வழங்கினார்.

பலாலி இராணுவமுகாமுக்கு வடக்குப் பகுதியிலுள்ள வீடமைப்புத் திட்டத்திலும், சிறு குடிசைகளிலும் நிரந்தரமாக வாழ்ந்துவந்தவர்கள் அங்கிருந்து வெளியேறி பிள்ளையார் கோவிலில், அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். இவர்களுக்கு கடந்த ஒருவார காலமாக மயிலிட்டிவடக்குபிரஜைகள் குழுவினர் உணவு வகைகள் சேகரித்து வழங்கினர்.

தற்போது இவர்கள் பழைய இடங்களுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

இவர்கள் பிரச்னை தொடர்பாக மயிலிட்டி கரையோரப் பிரஜைகள் குழுவினரும், அக்கறை எடுத்திருந்தனர். [க]

### விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கலாவதி மரண விசாரணை, யாழ் நீதவான் எஸ் நாகராசா முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்டு, ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

### இரு மாதங்களுக்கு முன் வானினல் மோதப்பட்ட வயோதிபர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

இருமாதங்களுக்கு முன்னர் கல்வியங்காட்டில் வான் ஒன்றினால் மோதப்பட்டு காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த வயோதிபர் நேற்று முன்தினம் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னட்டியார் நடராசாவின் (64வயது) மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ்.மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினர்.

கல்வியங்காட்டில் ஏப்பிரல் 22ம் தேதி வான் ஒன்றினால் மோதப்பட்ட இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 27ம் தேதி வீடு திரும்பினரென்றும் பின்னர், சுகவீனமுற்று இம் மாதம் 6 ம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, 8ம் திகதி மரணமானரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் சுயநினைவுடன் இருந்தாரென்றும் மோதிய வான் நம்பரை தெரியாதென்றும் சாரதியையும் தெரியாதென்றும் இறந்தவர் கூறியதாக விசாரணையில் கூறப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## காங்கேசன் ஊழியர்கள் உண்ணாவிரத நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள், கொள்கைகள், கடத்தலை ஆட்சேபித்து உண்ணாவிரதமொன்றை நடத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்துவருகின்றனர்.

இந்த உண்ணாவிரதத்தில், சகல ஊழியர்களும் கலந்து கொள்வார்கள் எனக் கூறப்படுகிறது.

அநேகமாக இவ்வார இறுதியில் இந்த உண்ணாவிரதம் நடைபெறலாம். (க)

## மே மாத ஒய்வூதியம் நாளை வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில், நாளை காலை மே மாதத்திற்கான ஒய்வூதியப்பணம் வழகப்படஇருககின்றது.

நாளை சாவகச்சேரி, காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை-மானிப்பாய் பகுதிக்கு வழங்கப்படும்.

14 ம் திகதி: காரைநகர், வேலணை, கொடிகாமம், சங்கானை, சுழிபுரம், கைதடி.

17-ம் திகதி: யாழ்ப்பாணம், பருத்தித்துறை, புங்குடுதீவு, வண்ணார்பண்ணை.

18-ம் திகதி: யாழ்ப்பாணம், கொக்குவில், கோப்பாய், அச்சுவேலி.

19-ம் திகதி: கரவெட்டி, நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, வசாவிளான், ஊர்காவற்றுறை. (க)


**பஸ் சாரதிகள் உடனடியாகத் தேவை**

**K. S. B. ரூர்ஸ்**

**யாழ்ப்பாணம் – கொழும்பு சொகுசு பஸ்சிற்கு**

திறமையும் நேர்மையும் உள்ள சாரதிகள் உடனடியாகத் தேவை.

திறமைக்கு நல்ல சம்பளம் வழங்கப்படும்.

முன் அனுபவம். லைசென்ஸ், இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் என்பவற்றுடன் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் வரவும்:

**K. S. B. ரூர்ஸ்,**
106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

3751


### யாழ்ப்பாணப்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தரத் தீர்வு. கிணறுகளுக்கும் – கழிவுநீர்க்கிடங்குகளுக்குமிடையேயுள்ள தூரம் கூடுதலாக இருப்பதனை ஊக்குவிக்க வேண்டும் யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதியில் கூடிய எண்ணிக்கையில் சிறிய குளங்கள் காணப்படுகின்றன. இக்குளங்கள் இப்பிரதேசத்துக் கிராமிய வாழ்வுக்கு முக்கியமானதாக இருக்கின்றன. பல குளங்கள் தூர்ந்து அழிந்துவருகின்றன. இப்பகுதியின் இயற்கையான வடிகாலமைப்பு பெரிதும் சீர்குலைக்கப்பட்டுக் காணப்படுகின்றன குளக் காணிகளையும், வெள்ள வாய்க்கால் காணிகளையும் பல இடங்களில் மக்கள் உத்தரவின்றிப் பிடித்தும் இருப்பதால் பெரிதும் பாவனைக்குக் கீழ்க் கொண்டுவருவது கடினமாக இருக்கின்றது. இப்பிரதேசத்து நீர்வளத்தைக் காக்க தரைகீழ் நீர்வளததையும், தரைமேல் நீர் வளத்தையும் பேணவேண்டும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கைத்தொழில்துறை சார்ந்த சூழல் பிரச்னைகள் குறைவாகக் காணப்படுகின்றது காங்கேசன்துறை சீமெந்து ஆலையால் வெளியேற்றபபடும் தூசி படிவதால் மாவிட்டபுரம், காங்காங்கேசன்துறை, தெல்லிப்பழை பகுதிகள் பெரிதும் பாதிப்படைகின்றன தாரங்கள், வீடுகளில் தூசிபடிவதால் பல வழிகளிளில் பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன கிருமிநாசினி பாவனையும் இம்மாவட்டத்தில் சூழற் பிரச்னைகளைத் தோற்றுவித்துள்ளது நகரக் கழிவுகள் சீரற்ற முறையில் வெளியேற்றப்படுவதால் யாழ்ப்பாண நகரப் பகுதிகளுள் இருக்கும் நீர் நிலைகள், கடற்கரையோரம் போன்றவற்றின் அழகும், சூழலும் பெரிதும் பாதிப்புக்குளளாகியிருக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் பல சூழற் பிரச்னைகள் மக்களாலே உருவாக்கப்பட்டன. மக்களிடையே சூழல் அறிவை வளர்ப்பதன் மூலம், சூழல் காப்புத் தொடர்பான சட்ட திட்டங்களை ஏற்படுத்துவதன் மூலம் சூழற் பிரச்னைகளுக்குத தீர்வுகாணலாம். யாழ்ப்பாண மாவட்டத்தில் கூடுதலாக மக்கள் வாழ்வதும், வளத்திற்கும் சூழலுக்குமிடையே நல்ல சமநிலை பேணப்படவேண்டும். இதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் குடிசன மீள் பரம்பல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். குடிசன மீள் பரம்பல் நடவடிக்கைகள் மூலமே குறிப்பாக செம்மண் பிரதேசம் காப்பாற்றப்படலாம்.

## வவனியாவில் கடத்தப்பட்டவர் பற்றிய தகவல் இல்லை

(வவனியா)

வவனியா குருமன்காடு என்ற இடத்திலிருந்து கடத்தப்பட்ட ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த எட்டுப்பேரது நிலை குறித்து எந்தவித தகவலும் இல்லை.

குறித்த எட்டுப்பேரையும் விடுவிக்கக்கோரி வவனியா அரசஅதிபர் திரு. கே வி. லோகேஸ்வரன், பிரஜைகள் குழுத்தலைவர் சட்டத்தரணி திரு. எக்ஸ். சொர்ணபாலா, முன்னாள் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம் ஆகியோர் அறிக்கை விடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கடத்தலுக்கு பின் குருமன் காடு பகுதியிலிருந்து வெளியேறிய தமிழ்க்குடும்பங்கள் இன்னமும் தமது இல்லங்களுக்குத் திரும்பவில்லை.

## கொழும்பில் நான்கு கடற்படையினர் கைது

(கொழும்பு)

கொழும்பு – கொச்சிக்கடை பகுதியில் தாக்குதலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக நான்கு கடற்படை வீரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் இப்பகுதியில் கடற்படையினருக்கும் கள்ளச் சாராயம் காய்ச்சும் ஒரு பிரிவினருக்கும் இடையில் ஏற்பட்ட தகாறில் இருவர் துப்பாக்கிச் சூடுபட்டுக் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகவே கடற்படைவீரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### குருபூசை

(சுண்டுக்குளி)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் தீர்மானத்தின் படி நான்கு சமய குரவருடைய குரு பூசையையும் நான்கு ஆலயங்களில் நடாத்துவதென்ற தீர்மானத்துக்கமைய ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலயத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

0 0 0

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின ஆதரவில் ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் ஆலயத்தில் கந்தபுராண படன பூர்த்தி விழா நடைபெற்றது இவ்விழாவில் கந்த புராணம் வாசித்தோருக்கு ஆசிரியர்திரு எஸ். கதிரேசபிள்ளை தலைமையில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

### மகோற்சவம்

[புலோலி]

வரணி சாவிலிப்பிட்டி கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 21ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 30ம் திகதி சப்பறத்திருவிழாவும் அடுத்த மாதம் 1ம் திகதி தேர்த்திருவிழாவும், 2ம் திகதி தீர்த்தத் திருவிழாவும், நடைபெறவுள்ளன.

### வவனியாவில் தொலைபேசிசேவை பாதிப்பு

(வவனியா)

வவனியாவிலிருந்து வெளியிடங்களுடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியாதுள்ளது.

மடுக்கந்த என்ற இடத்திலுள்ள அஞ்சல், தொலை தொடர்புச் சாதனத்தில் ஏற்பட்ட கோளாறே தொலைபேசிகள் செயலிழந்தமைக்குக் காரணமாகும்.

ஆனாலும் உள்ளூர்த் தொலைபேசிகள் இயங்கின.

கோளாறினை திருத்துவதற்கு கொழும்பிலிருந்து தொலைத்தொடர்பு திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் வவனியாவுக்கு வந்துள்ளார்.

இந்த அதிகாரி அவசர அவசரமாக ஹெலிகொப்டரில் அனுப்பி வைக்கப்பட்டார். திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

### ஒப்படைக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் வடக்கில், க. சி. இராஜேஸ்வரன் வீட்டுக்குள் நள்ளிரவு சென்ற திருடர்கள் அவரது மனைவியின் தாலிக்கொடியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய இவர் கடந்த ஜனவரி முதல் கொழும்பு வருமான வரிக் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்ததுடன், கடந்த 6 மாதமாக சுகவீனமுற்று சம்பளமும் பெறாமல் பலத்த கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்.

தாலிக்கொடியைத் திருப்பித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

### அறிக்கை வந்த பின்னர் ஆராயப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் இந்திய விஜயம் தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் பௌத்த சங்கத்தினர் விரைவில் கூடி நிலைமையை தெளிவாக ஆராயவிருப்பதாக அகில இலங்கை பௌத்த சங்க செயலாளர் தெரிவித்தார். (க)

### விமானத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம்

(நெடுந்தீவு)

அண்மையில் நெடுந்தீவுக்கு மேலாகப் பறந்த விமானத்தில இருந்து துப்பாக்கிப் பிரயோகம்செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது

நெடுந்தீவுப் பகுதியில் வட்டமிட்ட மேற்படி விமானத்திலிருந்து நெடுந்தீவு மேற்கு வெட்டைக்காடு, கிழக்குத் துறைமுகப் பகுதி ஆகிய இடங்களில் துப்பாக்கி ரவைகள் வந்து விழுந்ததாகவும் கூறப்படுகின்றது

வெடிச சத்தத்தைக் கேட்டு அப்பகுதிமக்கள் சிதறி ஒதுக்குப்புறம் தேடிச் சென்றதாகவும், சில நிமிடங்களில் விமானம் மறைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

# இன்றைய பலன்

மாதம்: வைகாசி 30 (1985-6-12) புதன்
திதி: நவமி-காலை 746-ன் மேல் தசமி.
நட்சத்திரம்: உத்தரட்டாதி பகல் 10-27ன்மேல் ரேவதி

மேடம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள். இதன் மூலம் பணம் செலவாகும். அரசியல்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

இடபம்: சீறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். உடல்நலமும் பாதிக்கப்படும்.

மிதுனம்: எக்கருமத்தையும் எண்ணித்துணிக. அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தைக் கோட்டைவிடக் கூடும்

கடகம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவீர்கள். காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்றும் கிடைக்கும்.

சிங்கம்: போட்டி விவகாரங்களில் பணம் விரயமாகும். எதிலும் மறைமுகத் தாக்குதல் நடத்துவர். மேலிடத்து அபிப்பிராயபேதங்களும் நடைபெறும்

கன்னி: உறவினர்கள் உதவிக்கு வருவர். வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும். குதூகலமான தினம்.

துலாம்: எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும். கொடுக்கல் வாங்கலினுல் பிணக்குகள் ஏற்படும். நண்பர்களைப் பகைத்துக் கொள்வீர்கள்.

விருச்சிகம்: புண்ணிய காரியங்களில் விருப்பம் மேவிடும். ஸ்தலயாத்திரை யொன்றும் மேற்கொள்ளப்படலாம். பிதாவழிச் சுகமும் உண்டு.

தனுசு: சுற்றதனுல் பயன் கைமேல் கிடைக்கும் அறிஞர்கள் போற்றுவர். ஆதரவு பெருகும்.

மகரம்: நீண்டநாள்கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும். சுற்றுடலில் மதிப்பு உயரும். ஆதரவும் பெருகும்.

கும்பம்: பொருள்முடை தென்படும். கடன்பட நேரிடும கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல்போகலாம்.

மீனம்: முன்னேற்றம் தடைப்படும். குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை விளைவிக்கும். சிந்தித்து செயல்படவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## அபிவிருத்திச் சங்க கூட்டம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பளை தெங்கு பனம்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க வருடாந்தக் கூட்டம் இம் மாதம் 15ம் திகதி நடைபெறவிருக்கிறது.

சங்கத் தலைவர்திரு பூ.இரத்தினம் தலைமையில் தெல்லிப்பளை தந்தை செல்வா பாடசாலையில் நடைபெறும் இக் கூட்டத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர்திரு.ச. வேலாயுதபிள்ளையும், பனம் பொருள் அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு கே.நடராசாவும் சிறப்புரையாற்றுவார்கள்.

## பிரிவுபசார வைபவம்

[வண்ணார்பண்ணை]

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் 31 வருடங்கள் ஆசிரிய சேவையாற்றி ஓய்வு பெற்ற திருமதி ஈ. ரி. இராசரத்தினம் ஆசிரியைக்கு இக் கல்லூரியின் கிறிஸ்தவ மன்றம், பழைய மாணவமன்றம், பழையமாணவ மன்றம் இணைந்து பிரிவுசரணை விருந்தொன்றை நடத்தியது.

ஓய்வுபெற்ற திருமதி இராசரத்தினம் இக்கல்லூரியின் பழைய மாணவியாகும். இவரது கல்விச் சேவையை பலரும் பாராட்டி உரையாற்றினர்.

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. மு.சே.இராசையா, உப தலைவர் திரு ஆ தளையசிங்கம், செயலாளர்திரு பொ.கந்தசாமி, உப செயலாளர் திரு.அ லோகநாதன், பொருளாளர் திரு சி செல்வராசா, உபபொருளாளர்திரு ந லோகநாதன், விளையாட்டுச் செயலாளர் திரு மெ.சந்திரன் போஷகர் திரு.சு. பரமேஸ்வரன், உப போசகர்பொ இராமுப்பிள்ளை, கணக்காய்வாளர் திரு க.ச கணபதிப்பிள்ளை 13 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# யாழ். இந்து வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் ஆட்டம் கடந்த ஞாயிறன்று யாழ். இந்துமைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் யாழ். இந்து பெற்றது. ஸ்கோர் விபரம்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 82 ஓட்டங்களை மட்டுமே பெற்று தமது சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் கங்காதரன், விமல்ராஜ். ராஜ்குமார் ஆகியோர் முறையே 22, 15, 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துஷ்யந்தன் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினுர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 89 ஓட்டங்களுக்கு தமது சகல விக்கெட்டுகளையும் இழந்து துடுப்பாட்டத்தில் சுரேஸ், பிரதிபன், விஜியேந்திரன் ஆகியோர் முறையே 25, 14, 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விஸ்வநாத் 42 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினுர். மீண்டும் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 67 ஓட்டங்களுக்கு தமது சகல விக்கெட்டுகளையும் இழந்தனர். துடுப்பாட்டத்தில் சுதாகரன் 24 ஓட்டங்களைப் பெற்ருர். பந்து வீச்சில் துஷ்யந்தன் சிறப்பாக பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளைப் கைப்பற்றினுர்.

வெற்றிபெற 61 ஓட்டத்தை பெறவேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து 63 ஓட்டங்களை 2 விக்கெட்டுக்களை இழந்து பெற்றது. துடுப்பாட்டத்தில் சுரேஸ், துஷ்யந்தன், பிரதீபன் ஆகியோர் முறையே 22 13, 12 ஓட்டங்களைப் பெற்றனர் இப்போட்டியில் யாழ். இந்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

யாழ். இந்துக்கல்லூரியின் பரியோவான் கல்லூரிக்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது ஸ்கோர்விபரம்வருமாறு;

யாழ். பரியோவான் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 9, ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் வாகீசன், நிகால் ஆகியோர் முறையே 22, 26 ஓட்டங்களைப் பெற்றனர் பந்துவீச்சில் கார்திகேயன், பிரபாநந்தன் ஆகியோர் முறையே 5, 3 விக்கெட்டுகளை 21, 16 ஓட்டங்களைக் கொடுத்து கைப்பற்றினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துக்கல்லூரி 119 ஓட்டங்களை 9 விக்கெட்டுகள் இழந்து பெற்ற நிலையில் தமது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டனர். துடுப்பாட்டத்தில் ரவிக்குமார் அதி கூடிய ஓட்டமாக 56 ஓட்டங்களை 6 பவுண்டரிகளுடன் பெற்ருர். மற்றும சறிகணேசன், பத்மபிரகாஷ் ஆகியோர் முறையே 14, 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அணியின் தலைவர் வாகீசன் 41 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து

[7-ம் பக்கம் பார்க்க]

## தபால் நிலையம் இயங்க அனுமதி

(பண்டத்தரிப்பு)

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தை தொடர்ந்து மூடப்பட்டிருந்த சங்கானை தபால் அலுவலகத்தில் முத்திரை விற்பனை, கடிதங்களை பதிவுசெய்தல், தந்திச்சேவை ஆகிய சேவைகளை மேற்கொள்ள தபால் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இத்தபால் அலுவலகம் மூடப்பட்டதினுல் இப்பகுதி பொதுமக்கள் அனுபவித்து வரும் கஸ்டங்கள் குறித்து தபால் நிலைய விழிப்புக்குழுவும், தபால் அதிபர் திரு இ. காசிராசலிங்கமும் இணைந்து தபால் திணைக்கள மேலிடத்திற்கு பல தடவைகள் எடுத்துக்காட்டியதைத் தொடர்ந்து மேற்படிமட்டுப்படுத்தப்பட்ட தபால் சேவைகளை இப்போதைக்கு மேற்கொள்ள யாழ் மாவட்ட தபால்சேவை அத்தியட்சகர் அனுமதி வழங்கியுள்ளார்.

## மதகுருமாருக்கு உணவு முத்திரை

(பண்டத்தரிப்பு)

மத குருமாருக்கும் உணவு முத்திரைகள் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது சரீவ மதங்களையும் சேர்ந்த குருமாருக்கு உண்வு முத்திரைகளை வழங்குவதற்கு முன்னேடியாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராமசேவை அலுவலர்கள் மூலமாக மதகுருமார் பற்றிய விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றது.

இந்து. கிறீஸ்தம் மதகுருமார்கள் இது தொடர்பாக தத்தமது பிரிவு கிராமசேவை அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களை தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை தற்போது சமூக சேவைத் திணைக் களத்தின் மாதாந்த உதவிப் பணத்தை பெற்றுவரும் வறிய மக்களும, இது வரை உணவு முத்திரைகளை பெருதிருந்தால் அவர்களுக்கு முத்திரை வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



வல்வை நிரந்தர கோயில் தொண்டர் சோமசுந்தரம் (பயில்வான்) புதல்வன் சிவயோகசுந்தரம் (அர்ச்சுணன்) சிவபதமடைந்தது சைவ சமயிகளுக்கு பேரிழப்பாகும். குறிப்பாக, வல்வெட்டித்துறை கோயில்கள், சிறந்த தொண்டனை இழந்துவிட்டன!

''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அப்பர் பெருமானின் இலட்சியத்தையே அர்ச்சுணன் குறிக்கோளாகக் கொண்டவர் இவருடைய சேவை, ஊருக்கும், ஏனைய மக்களுக்கும் பரந்து விரிந்து, சமயத்தின் அடிப்படை விருத்திக்கே பணி புரிந்தார்.

பெரியார்களுடன் நட்புக் கொண்டு அவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டு நடந்தார். திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுடைய அடிமையாகி, வாரியார் அவர்களை 1983ல் இலங்கை பூராவும் உள்ள அநேக ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று சொற்பொழிவுகளை நிகழ்த்தி சைவ சமயத்தையும் அதன் மகிமைகளையும் மக்களுக்கு விளங்க வைத்தார். தேவார, திருவாசகங்களை அந்த அந்த முறையோடு ஓதி பஜனை செய்து, சொற்பொழிவுகளை நிகழ்த்தி 'குட்டி வாரியார்' எனப் புகழப்பட்டவர். தென்னிந்திய ஸ்தல யாத்திரை மேற்கொண்டிருந்தவேளை, புண்ணிய பூமியாகிய சென்னையிலே தனது நாற்பத்திரண்டு வயதினிலே பிரம்மச்சாரியாக வாழ்ந்து சிவபதமடைந்து விட்டார்கள். எல்லாம் சிவன் செயல்.

— இலட்சுமணன்


# COLOMBO - BERLIN

## உடனடியான பயண ஒழுங்குகள்

- குறைவான கட்டணங்கள்
- நம்பிக்கையைத் தரும் சேவை

★ யாழ்ப்பாணத்தில் இருந்தபடியே பயணத்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யலாம். பணத்தைக் கொழும்புக்கு எடுத்துச் செல்லத் தேவையில்லை.

★ கொழும்பில் நல்ல தங்குமிட வசதி, உணவு வசதி, கட்டுநாயக்கா செல்லப் பிரயாண ஒழுங்கு ஆகியவற்றை நாம் செய்து தருவோம்.

★ கட்டுநாயக்காவரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து எல்லா உதவியும் செய்வார்.

★ பயணக் காசோலைகளையும் எம்மிடம் பெறலாம்.

சிங்கப்பூர் ஊடாகப் பேர்லின் செல்லும் வசதியை ஒவ்வொரு வியாழக்கிழமையும் 20 பயணிகளுக்கு மட்டும் ஏற்படுத்தித் தருவோம். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புவோர் நேரத்துடன் தமது ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளவும்.

Dyn. Ads

Confirmation, Re-confirmation, Cancellation ஆகிய பணிகளையும் நாம் கவனிப்போம்.

இந்தியப் பிரயாணம்: இந்தியாவுக்கு விஸா, கடவுச் சீட்டு, கடவுச்சீட்டுப் புதுப்பித்தல், பொண்ட் ஆகியவற்றுக்கான சகல ஒழுங்குகளையும் செய்து தருவோம்.

உலகின் எப்பகுதிக்கும் எம்மிடம் விமானச் சீட்டுக்கள் பெறலாம்.

மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தில் திருமதி சாவித்திரிதேவி பாலசிங்கம் அவர்களுடன் தொடர்புகொள்க.

MACK TRAVELS LTD.

இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24791

கிளைகள்: QUICKS ENTERPRISES — TRAVELS AND TOURS
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

QUICKS TRAVELS AND TOURS
சரஸ்வதி தோட்டம், Church Road, சாவகச்சேரி.
Tel. 273

குமரன் மினி
சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30, 4-15
Emmanuel 3
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)
Emmanuel 3
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

ஹரன் மினி
தினசரி 10-30, 2-30
சிவாஜி, — பிரபு, கே. ஆர். விஜயா
மிருதங்கசக்கரவர்த்தி
வெண்திரையில்
விதி
(கலர்)

ஆனந்தி
வீடியோ சினிமா
(மனோகராவில்)
தினசரி 10-30, 2-30
ரஜனி, அம்பிகா, பாக்கியராஜ் நடித்த
நான் சிவப்பு மனிதன்
(கலர்)

ஸ்ரான்லி மினி
(சினிமா)
5'X5' திரையில்
10-30, 2-15, 4-15
DIVINE EMMANUEL
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

சிவன் மினி சினிமா
K. K. S. றோட், சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
11 6-85 முதல்
10-30, 12-30, 2-30, 4-30
JULIA
கண்டிப்பாக 18 வயதுக்கு உட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2 30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
சலங்கை ஒலி
கடைசிவாரம்

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா நடித்த
ஆயிரம் வாசலி இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10 30, 2-30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)


# றமழான் சிந்தனை

ஏ! மனிதா நீ என்ன? உனது தந்தையின் நரம்புகளில் இருப்பது என்ன? ஒரு சந்தர்ப்பத்தில் நீ உனது தந்தையின் முதுகந்தண்டில் இருந்ததை மறந்து விட்டாயா? உன்னைச் சுமந்த தந்தையை நீ மறந்து விட்டாய் அல்லவா? வயோதிபம் அடைந்த உனது தந்தையை இன்று நீ ஏளனம் செய்கின்றாய். துன்புறுத்துகின்றாய். உன்னை உலகிற்கு கொண்டுவர காரணமாயிருந்தவர் யார்? ஏன் அவரை இம்சிக்கின்றாய். அவர் நினைந்திருந்தால் நீ சிறு குழந்தையாக இருக்கும் போது உன்னால் ஏற்பட்ட கஷ்டத்தினால் உன்னை குப்பை வாளியில் போட்டிருக்கலாம் அல்லவா? மாறாக அவர் உன்னை அல்லும் பகலும் பாதுகாத்தற்கு நன்றிக்கடவா அவரை துன்புறுத்துகின்றாய்!

உனது செயல்களைக்கொண்டு பகுத்தறிவைக் கொண்டு, விஞ்ஞானத்தைக் கொண்டு சக்திகளைக் கொண்டு எல்லாம் நடைபெறுகின்றது என்பதுதான் உனது எண்ணம? நீ வந்த நோக்கம் அல்லஹ்வின் கட்டளைகள் என்ன என்பதை மறந்து விட்டாய் உனக்குக் கஸ்டங்கள் துன்பங்கள் ஏற்பட்டுவிட்டால் படைத்தவனைப் பழிக்கின்றாய். அதளபாதாளத்துக்கு உனது கெட்ட அமல்கள் அழைத்து செல்வதை நீ அறிந்துகொள் உனனை நீ மாற்றிக்கொள் இம்மையிலும் மறுமையிலும் நீ வெற்றி வீரனாக முடியும்.

தொகுப்பு: அ. க. அக்பர் ஜின்னா.



நியூசாந்தி (மினி)
யாழ். சாந்தி சினிமாவில்
10-30, 2-30
சிவாஜி, சுஜாதா, பிரபு, ஜெய்சங்கர்
நேர்மை
[புதிய வெளியீடு]

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காட்சி:10-30, பி.ப.2-30, 4-30
CRUEL PASSION
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3-30,
அகில இந்திய டிஸ்கோபுகழ் ஆனந்தபாபு, கார்த்திக், சந்திரசேகர், சாதனா நடித்த
புயல் கடந்த பூமி

யாழ். வின்சர் மினி
தினசரி 10 30, 2-30
கமலஹாசன் (இருவேடம்) ஸ்ரீதேவி சுருளிராஜன், மனோகர், அசோகன், சிமா நடித்த
சங்கர்லால்

வின்ஸர்
தினசரி 10-30, 2-00, 4-15
Yul Brynner in POPPY IS A FLOWER
போதைவஸ்துக் கடத்தும் பயங்கரக் கும்பல் ஒன்றை அம்பலமாக்கும் மர்மம், திகில் நிறைந்த சித்திரம்.

அண்மையில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியரும், சமூக சேவையாளருமான அமரர் சோ. ஜெயச்சந்திரனின் குடும்பத்திற்கு உதவுமுகமாக வடபகுதி மக்கள் வங்கி ஊழியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 25.000 ரூபாவையும் அச்சுவேலி லயன்ஸ் கழகத் தலைவரும், யாழ் பிரதேச மக்கள் வங்கி அலுவலக உத்தியோகத்தருமான திரு வி டபிள்யூ சிதம்பரப்பிள்ளையினால் திருமதி ஜெயச்சந்திரனிடம் கையளிக்கப்பட்டது.

அமரர் ஜெயச்சந்திரனின் இரு பிள்ளைகளின் பெயரில் தலா 5 000 ரூபா நிலையான வைப்பில் இடப்பட்டு, நிலையான வைப்புப் பத்திரங்களும், மிகுதி 15 000 ரூபாவுக்கான காசோலையும் திரு சிதம்பரப்பிள்ளையினால் திருமதி ஜெயச்சந்திரனிடம் கையளிக்கப்பட்டது.

## இந்தப் பகுதிகளில் மின்சாரம் இல்லை

(பண்டத்தரிப்பு)

சட்ட விரோத மின்பாவனையால் ஏற்பட்ட மின்சக்தி அதிகரிப்பினால் மின்சார சாதனம் ஒன்று பழுதடைந்ததைத் தொடர்ந்து பண்டத்தரிப்பு. சில்லாலை ஆகிய பகுதிகள் கடந்த ஆறுதினங்களாக மின்சார விநியோகம் இல்லாத நிலையில் இருந்துவருகின்றன

'மெயின் சுவிச்' என்ற சாதனமே இவ்வாறு அதிகரித்த மின்பளுவினால் எரிந்து சேதமடைந்துவிட்டதாகவும் மின்சாரசாதனங்கள் யாவும் பாதுகாப்பு கருதி யாழ்ப்பாணம் கோட்டையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருப்பதாலும் அங்கிருந்து இவற்றை எடுத்து வருவதில் பலத்த சிரமங்கள் ஏற்படுவதால் உடனடியாக திருத்தவேலைகளை செய்து மக்களுக்கு மின்சார விநியோகத்தை வழங்கமுடியாதிருப்பதாக பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக மின்சாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

## யாழ். இந்து

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கெட்டுக்களை வீழ்த்தினர். மீண்டும் துடுப்பெடுத்தாடிய யாழ் பரியோவான் கல்லூரி 116 ஓட்டங்களை 5 விக்கெட்டுகளை இழந்து பெற்ற நிலையில் தமது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர் துடுப்பாட்டத்தில் அரவிந்தன், வாகீசன் ஆனந்தராஜன் ஆகியோர் முறையே36,26 21ஓட்டங்களை பெற்றனர் பந்துவீச்சில் பிரபாநந்தன் 3 விக்கெட்டுக்களையும் புவனேந்திரன்,ரவிகுமார்தலா 1விக்கெட்டையும் கைப்பற்றினர் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து ஆட்டநேர அறுதியில் 76ஓட்டங்களை 3 விக்கெட்டுகளை இழந்து பெற்றது துடுப்பாட்டத்தில் பத்மபிரகாஷ்33 ஓட்டங்களைப் பெற்றார்.

இப் போட்டியில் யாழ்.இந்துக்கல்லூரி முதலாவது இன்னிங்ஸில் புள்ளிகள் வித்தியாசத்தில்யாழ் பரியோவான் கல்லூரியைத் தோற்கடித்தது.

## முதுகலைமாணி பட்டம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

திருமதி சரோஜா சிவசந்திரன் அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் புவியியற் துறையில் முதுகலைமாணிப்பட்டம் பெற்றார்.

இப்பட்டம் பெறுவதற்கு "இலங்கையின் தேயிலைக்கைத்தொழிலில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் 1970 — 1980" என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்திருந்தார்.

வேலணையைச் சேர்ந்த திருமதி சரோஜா சிவசந்திரன் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராக முன்னர் கடமையாற்றினர். தற்போது சென்னையில் பாரத வங்கித் தொழிற்சங்க ஆராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணி புரிகின்றார். தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் உதவி பெற்று "இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அண்மைக் காலங்களில் புலம்பெயர்ந்த தமிழர் நிலை" பற்றிய ஆய்வில் தற்போது ஈடுபட்டுள்ளார்.

## சட்டவிரோத மின்பாவனை

(சுண்டுக்குளி)

ஆனைக்கோட்டை உப அபிவிருத்திச்சபையின் மின்சார மேற்பார்வையாளரும் அவ்வலுவலக ஊழியர்களும் ஆனைக்கோட்டைப்பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களது வீடுகளுக்கு சென்று அவர்களுடைய பெயர், விலாசம் முதலியவற்றைக் கேட்டறிந்து சென்றுள்ளனர்.

## வீடுகள் தீக்கிரை

(வவனியா)

வவனியா தவசிகுளத்திற்கு அருகில் இரு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இரவு வேளையில் இனம்தெரியாத கோஷ்டியினரே இத்தீவைப்பு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொலைக்காட்சிப் பெட்டி, கஸட் றேடியோ உட்படபெறுமதியானவை எரிந்து நாகமாகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதுபற்றி புகார் வவனியா இ. தொ. கா அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளது.

## யாருடையது?

குளத்தடி திரு. எஸ். கே. அமீன் என்பவரின் புகைப்படத்தினையும், சிறு தொகைப் பணத்தினையும் யாழ் மாநகர சபையைச் சேர்ந்த திரு வே. இராசநாயகம் என்பவர் கண்டெடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.


# எமது புதிய வெளியீடுகள்

ராமன் ஸ்ரீ ராமன்
அவளைச் சொல்லிக் குற்றமில்லை
வெள்ளை மனசு
பார் மகளே பார்
— V. G. P. Original

நான் சிகப்பு மனிதன்
உதய கீதம்
உறவுகள்
நாம் இருவர்
புது யுகம்
காக்கிச் சட்டை
— PYRAMID Original

மேலும் பல புதிய வெளியீடுகளை வெகு விரைவில் எதிர்பாருங்கள்.

குணம் வீடியோ சென்டர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23618
(3745)


# 16-ம் நாள் நினைவஞ்சலி

## திருமதி அருணாசலம் செட்டியார் மகேஸ்வரி



முகவுரை: 21-12-1929

முடிவுரை: 29-05-1985

எமது குடும்பத்திற்காக இதுவரை தன்னுழைப்பை நல்கி எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வம் இன்று எம்மை எல்லாம் அழவைத்து தன் உயிரையே எமக்காக அர்ப்பணித்து ஓய்ந்துவிட்டது உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உங்கள் பிரிவால் துயருறும்,

பிள்ளைகள், சகோதரங்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.

இல. 306, 9ம் குறுக்குத்தெரு,
மணியந்தோட்டம்,
கொழும்புத்துறை.

3732

# தனியார்பஸ்களுக்கு

## பாதுகாப்பு வேண்டும்

### அரச அதிபரிடம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கொழும்பிற்கு தனியார் பஸ்களில் செல்லும் பிரயாணிகளுக்கு வழியில் பாதுகாப்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தனியார் பஸ் நிறுவனங்கள் சார்பில் பிரதிநிதி ஒருவர், நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடன் தொடர்புகொண்டு வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பிற்கு எவ்வளவு தாமதமாக சென்றாலும் சரி அல்லது மறுநாள் சென்றாலும் சரி, வழியில் பாதுகாப்பு அளித்தால் போதும் எனப் பிரயாணிகள் கேட்பதாக அவர் அரசாங்க அதிபரிடம் தெரிவித்தார்

கொழும்பிலிருந்துவரும் பஸ்கள், ஊரடங்கு சட்ட நேரத்திற்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்துவிடவேண்டும் என்றும், பிரயாணிகள் கேட்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி உடன் நடவடிக்கை எடுத்து பாதுகாப்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய முயற்சிப்பதாக அரசாங்க அதிபர் உறுதியளித்தார். (க)

## திரும்ப கிடைத்தது

(வவனியா)

பரந்தனில் வைத்து கடத்தப்பட்ட யாழ்ப்பாணத்திற்கு கொழும்பு பத்திரிகைகளை ஏற்றிச் சென்றவான் உரிமையாளரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## குச்சவெளி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இனந்தெரியாதவர்கள் ஒரு டிரக்கையும் ஜீப்பையும் கடத்திச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது

இதேசமயம் மட்டக்களப்பு புப்பழுதியில் ஒருஇயக்கத்தைச் சேர்ந்த 4 இளைஞர்கள் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

## பாதுகாப்புநிதி நிரந்தர சேமிப்பில் வைக்கப்படும்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு நிதியை மத்திய வங்கியில் நிரந்தர சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்வதற்கு ஜனாதிபதியும். தேசிய பாதுகாப்பு அமைச்சரும் அனுமதி அளித்துள்ளனர். இந்நிலையில் தற்போது 3 கோடி 50 லட்சம் ரூபா சேர்ந்துள்ளதாம்.

## விஞ்ஞான ..

[1ம் பக்கத் தொடர்ச்சி].

என்று தெரிகின்றது.

விளையாட்டுத்துறை ஆசிரியர் பதவிக்கு 15 ஆயிரம் பேரும் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு 500 பேரும் விண்ணப்பித்துள்ளனர் விஞ்ஞான பட்டதாரிகளுக்கான நியமனம் ஒக்டோபர் மாதமும் விளையாட்டுத்துறை ஆசிரியர்களுக்கான நியமனம் ஜனவரியிலும் வழங்கப்படும்.

## வவனியாவில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்ட நெல் மூடைகளின் பெறுமதி சுமார் இரண்டு லட்சம் ரூபா என மதிப்பிடப் படுகின்றது.

450 நெல் மூடைகள் இங்கிருந்து கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்தியுள்ளார்.

ஐ நா. செயலாளருடன் பல விடங்கள் பற்றியும் கலந்துரையாடிய அவர் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வுதான் சரியானதாக விருக்கும் என்று தெரிவித்தார். இலங்கையில் ஐக்கியம் ஒருமைப் பாட்டுக்குளேயே தீர்வு ஏற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஈழவேந்தன் அறிக்கை

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னை குறித்து இந்திய பிரதமர் ரஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அண்மையில் பேச்சுக்களை நடத்திய பின்பும் திருகோணமலை பகுதியில் இலங்கை பாதுகாப்புப்படையினர் தமிழர்கள் அதிக அளவில் வாழும் பல கிராமங்களைத்தாக்கியுள்ளமை இலங்கை அரசு இந்திய அரசுக்கு எவ்வளவு மதிப்பைக் கொடுக்கின்றது என்பதை தெளிவாக்கியுள்ளது.

இவ்வாறு தமிழ் ஈழவிடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் திரு கே. ஈழவேந்தன் சென்னையில் வைத்து இந்தியப் பிரதமர் ரஜீவுக்கு விடுத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளார். இலங்கையில் தமிழினம் ஒழிக்கப்படுவதைத் தடுக்கத் தகுந்த நடவடிக்கைளை இந்தியப் பிரதமர் எடுக்கவேண்டியது அவசியமாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். [அ]

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா நாகம்மா

நயினாதீவைச் சேர்ந்த நாகம்மா காலமாகிவிட்டார். இவர் கந்தையாவின் அன்புமனைவியும் அன்னலெட்சுமி (கெங்கா -Centrel Nursing Home, இராசலட்சுமி (செல்வி), ஸ்ரீரஞ்சன் (கனடா), விஜயலெட்சுமி ஆகியோரின் அன்புத்தாயாரும், வை. கணேசஷ மூர்த்தி இத்தாலி,யின் அன்பு மாமியாரும், வள்ளியம்மை, மயில்வாகனம், காலஞ்சென்ற சின்னத்துரை, காலம்சென்ற தருமலிங்கம், காலம்சென்ற மீனாட்சி, காலம்சென்ற அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜமோகனின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1ம் வட்டாரம் நயினாதீவு இல்லத்திலிருந்து 12-06-85 (இன்று மாலை 4 மணியளவில் சல்விவரவு மயானத்தில் தகனம் செய்யப்படும். நண்பர்களும், உற்றார், உறவினரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- கே. கந்தையா,
(நீர்ப்பாசன இலாகா)
1-ம் வட்டாரம், நயினாதீவு.

3748

## ரஜீவ் இன்று அமெரிக்காவில்

[லண்டன்]

இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் றீகனும் இன்று வெள்ளைமாளிகையில் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தவுள்ளனர்.

திரு ரஜீவ் காந்தி தமது அல்ஜீரியாவுக்கான ஒருநாள் விஜயத்தைமுடித்துக்கொண்டு அங்கிருந்து நேற்று வாஷிங்டனுக்கான பயணத்தை மேற்கொண்டார்.

இன்றுநடைபெறும்ரஜீவ் றீகன் பேச்சுவார்த்தையில்; பாகிஸ்தானுக்கான அமெரிக்காவின் இராணுவ உதவி, இல்லாமாபாத்தில் அணுவாயுதத்திட்டம் ஆகிய அம்சங்கள் முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## அடிகாயத்துடன் ஆஸ்பத்திரியில்

(வவனியா)

வவனியா - மன்னார் வீதியில் நெளுக் குளத்திற்கு அருகில் வீதியில் நடந்து சென்ற இளைஞன் ஒருவர் பலத்த அடிகாயத்துடன் வவனியா அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மனோகரன் என்ற இளைஞனே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராகும்.

## திருமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

50பேரை பாதுகாப்பு படையினர் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாக்கு நீரிணையில் இலங்கை, இந்திய அரசுகளின் கடற்படை ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து தமிழ் தீவிரவாதிகள் தமது ஆயுதக்கடத்தலை மேற்கொள்ள முடியாது உள்ளூரில் ஆயுதங்களை கொள்ளை அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர் என்று அரச அறிக்கையொன்று கூறியது.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வன்செயல்கள் நடைபெற்றபோதும் மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கை கூறியது. (அ)

## குருநகர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வுப் பொருட்களை கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது

ஆயுதப்படையினா வந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து களஞ்சியத்தை பாதுகாத்ததாகவும் கூறப்படுகிறது இப்பகுதியில் வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

கொள்ளையடித்துச் செல்லப்பட்ட சில அரிசி மூடைகள் மீட்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. [க]

## தலவாக்கலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒலிவூட் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் சம்பந்தமாக கிராமிய கைத்தொழிற்றுறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நேற்றுக்காலை ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடினார்.

மேற்படி தோட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவத்தை அடுத்து, சுமார் 60 ஆயிரம் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்துவருவது தெரிந்ததே.

வேலைநிறுத்தம் சம்பந்தமான விபரங்களை திரு. தொண்டமானிடம் கேட்டறிந்து கொண்ட ஜனாதிபதி, தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதிஅளித்தார். (மா)

## அறுவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

குருநகரில் நேற்று மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அறுவர் படுகாயமடைந்துள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த அருள் நாயகம், சந்திரன் ஐயனார் உட்பட ஆறு பேர் காயமடைந்தவராவர்.

இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [மா]

## இந்திய உதவி...

(1-பக்கத் தொடர்ச்சி)

கோம் நகரில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையில் நம்பிக்கை தெரிவித்தார்,

சுவீடனின் வர்த்தக மன்றம், சுவீடிஷ் நிதியம், சுவீடின் வர்த்தக சம்மேளனம் ஆகியன வினால் கூட்டாக ஒழுங்குசெய்யப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கில் இலங்கை நிதியமைச்சர் ரொனி டிமெல் கலந்துகொண்டு உரையாற்றினார் இக்கருத்தரங்கில் பெருமளவு சுவீடிஷ் தொழில் அதிபர்கள் கலந்துகொண்டனர். (அ)

## பெரும் உணவு...

(1-ம் பக்கத் தொடாச்சி)

விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.

வருவாய்குறைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு முத்திரைக்கும், தொழில் இன்றி இருக்கும் மீனவர்களுக்கு வழங்கிய உணவு முத்திரைக்கும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கும் வழங்குவதற்காகவே இப்பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டன.

பொதுமக்கள் மீதான நம்பிக்கையின் பேரிலேயே மூன்று மாதத்துக்கு போதுமான உணவுப் பொருட்களை சேகரித்து வைத்தோம்.

இந்த நம்பிக்கையைப் பாதுகாப்பது உங்கள் கடமையாகும். இப் பொருட்கள் களவு போனால் தொடர்ந்தும் இவ்வளவுதொகையான பொருட்களை இங்கு அனுப்புவதற்கு உணவு இலாகா தயக்கம் கொள்ளக்கூடும். இதனால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளை உணராத பொதுமக்களில் சிலர் இந்த உணவுப் பொருட்களை எடுத்துச் சென்றதையிட்டுக் கவலையடைகின்றேன்.

85 தை மாதத்திலிருந்து 6 மாதம் உணவு முத்திரை பெற்றுவந்த மீனவர்களுக்கு மேலும் ஆறு மாதம் இம மாதம் ஜூனிலிருந்து உணவு முத்திரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும் அதனை வழங்க முடியாத சூழ்நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இதனை நன்குணர்ந்து எடுத்துச்செல்லப்பட்ட உணவுப் பொருட்களைத் திருப்பித்தருமாறு வினயமாக வேண்டுகின்றறன்.

இவ்வாறு எடுத்துச்செல்லப்பட்ட பொருட்களை எவராவது குறைந்த விலையில் விற்றால் அதனை வாங்கவேண்டாமென்றும் பொதுமக்களையும், வர்த்தகர்களையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எடுத்துச்செல்லப்பட்ட பொருடகளை ஏதாவதொரு பொது இடத்தில் ஒப்படைக்கலாமென்றும் அவ்வாறு ஒப்படைப்பவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன், (மா)

## விசேஷ பொலிஸ் லண்டன் சென்றது

[கொழும்பு]

தமிழ் தீவிரவாதிகளுக்கு, பிரிட்டனில் ஆயுதக் கொள்வனவுசெய்ய தமிழ் வர்த்தகர் ஒருவர் சர்வதேச ரீதியில் ரெண்டர் கோரியிருந்தது சம்பந்தமாக மேற்கொண்டு விசாரணைகள் நடாத்துவதற்காக, விசேஷ பொலிஸ் கோஷ்டியொன்று நேற்றிரவு லண்டன் புறப்பட்டுச் சென்றது. (மா)

## இஸ்ரேலில் 21 சிறுவர்கள் விபத்தில் மரணம்

[டெல் அவிவ்]

பிரயாணிகள் ரயில்வண்டியொன்று பாடசாலை பஸ் ஒன்றின்மீது மோதியதில் சுமார் 21பாடசாலைப்பிள்ளைகள் மரணமாகியுள்ளனர். 70 பேர் படுகாயமடைந்துளனர் இதன் காரணமா இன்று 12ம் திகதி இஸ்ரேலிலுள்ள பாடசாலைகள் அஞ்லிக்காக மூடப்பட்டுள்ளன.

## திருகோணமலை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்புகொண்டு இங்குள்ள இந்திய உயர்ஸ்தானிகர் திரு. டிக்ஸித்திடம் விசாரித்தார்.

புதுடில்லியிலிருந்து கிடைத்த தகவலையடுத்து திரு. காந்தி கொழும்புக்குத் தொடர்பு கொண்ண தாகத்தெரிகின்றது. திருகோணமலையில் நடக்கும் படுகொலைகள் பற்றி திரு. காந்தி விசாரித்ததாக தெரிய வருகின்றது.

## கடத்தல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாம் என்று அவ்வறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அத்தியாவசிய சேவையாற்றும் நிலையங்களில் இடம்பெறும் கொள்ளை, வாகனங்களைக் கடத்தல் போன்ற சம்பவங்களால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றும் அச்செய்தியில் கவலைதெரிவிக்கப்பட்டது.

### உரிமை கோருக!

கொள்ளை, கடத்தல் சம்பவங்களில் ஈடுபடும் இயக்கங்கள் தங்கள் செயலுக்கு உரிமைகோரவேண்டுமெனறும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அத்தியாவசிய சேவைகள் பாதிக்காத நிலையில் எடுத்தவற்றைத், திரும்பவும் ஒப்படைத்துவிடவேண்டும் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களைப் பாதிக்கும் செயல்களில் 'மக்கள் விரோத சக்திகள்தான் ஈடுபடுவார்கள்' என்று தெரிவித்த அவ்வறிக்கை. அவ்விதமாக ஈடுபடுபவர்கள் 'சமூகவிரோதிகள்' என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது

### குருநகர் சம்பவம்

குருநகரிலுள்ள உணவுப் பொருள் விநியோகிக்கும் களஞ்சியத்தில் இடம்பெற்ற (404 அரிசி மூடைகள்) கொள் சம்பவத்துக்கும் 'தமிழ் ஈழ விடுதலைப்புலி'கள் இயக்கத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்று மறுப்புத் தெரிவித்ததுடன், அரிசி மூடைகளைக் கொள்ளை அடித்தவர்கள் அவற்றைத் திரும்பவும் ஒப்படைத்துவிட வேண்டுவென்றும் பரிவுடன் வேண்டுகோள் விடுக்கப்பட்டது

தனியார் நிறுவனங்களில் இடம் பெறும் கொள்ளைச் சம்பவங்களுக்கும், வாகனங்கள் கடத்திச் செல்வதற்கும் அவ்வானொலியில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அச்சியந்திரசாலை யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி. 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu O. Box 49. Telegram Eelanada, Telephone: 22389-24126.